**மத்திய பிரிவு**
**(9 வயது முதல் 12 வயது வரை)**
**மாதிரிக்கேள்விகள்**

1 உங்கள் சமயம் எது?
சைவ சமயம்

2 சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்களை எப்படி அழைப்பீர்கள்?
சைவர்கள் என அழைப்போம்.

3 சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் என்று கொள்ளப்டுபவர் யார்?
சிவபெருமான்

4 சிவபெருமான் எப்படிப் பட்டவர் என்று சைவ சமயம் கூறுகிறது? 3 விடயம் கூறுக.
சிவபெருமான் என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், அன்பு வடிவானவர் (எல்லா உயிர்களையும் காப்பவர்) எனச் சைவ சமயம் கூறுகிறது.

5 சிவபெருமானை வேறு எந்தப் பெயர்களினால் அழைப்பீர்கள்? 5 கூறுக.
அமலன், அரன், அந்திவண்ணன், அங்கணன், அங்கணாளன் அமலன் அமுதவேணி ஆலமுண்டோன் ஆதிநாதன் ஆதிரையான் ஆதிசிவன் இடபக்கொடியோன் ஈசன் ஈசுவரன் உத்தரன் ஐந்துமுகன் முக்கண்ணன் கங்கைவேணியன் கங்காதரன்

6 சிவபெருமான் தலையை அலங்கரிப்து எவை?
பிறைச் சந்திரன், கங்கை

7 சிவபெருமானின் கழுத்தை அலங்கரிப்பது எது?
அரவம் - பாம்பு – நாகபாம்பு

8 சிவராத்திரி எந்த மாதத்தில் வருகிறது?
மாசி மாதத்தில்

9 “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” - இதைக் கூறியவர் யார்? எங்கே கூறியுள்ளார்?
ஔவையார். கொன்றைவேந்தனில் கூறியுள்ளார்.

10 தந்தை சொல் மிக்க ... இந்த பழமொழியைப் பூர்த்தி செய்க.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.

11 நாம் கடவுளை வணங்குவதற்குச் செல்லும் இடம் எது?
கோயில்

12 கோயில் இல்லா ஊரில் ........... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும்.

கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி.

13 ஆலயம் தொழுவது ... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும்
ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பது அந்தப் பழமொழி.

14 திருநிற்றை எந்த வேளைகளில் தரிக்கலாம்?
வீபூதியைக் காலையிலும, மாலையிலும் நிராடிய பின்பும், உணவருந்துவதற்கு முன்னும் நித்திரைக்கு முன்னும் பின்னும் தரித்தல் சிறந்தது.

15 ஔவையார் அருளிய நீதி நூலகள் எவை?
ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

16 ஒரு ஊரை அழகு செய்வது எது?
கோயில்

17 கோயில் வாசலை அலங்கரிப்பது எது?
கோயில் கோபுரம்

18 கோயில் அடைந்ததும் எதைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்?
கோயில் கோபுரத்தைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்.

19 மாணவர்களிடம் இருக்க வேண்டிய நல்ல குணங்கள் 4 கூறவும்.
கடவுளைத் தினமும் வழிபடல், எப்பொழுதும் உண்மை பேசுதல், ஒருவரின் உடலுக்கோ மனதிற்கோ துன்பம் விளைவிக்காதிருத்தல், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல், பெரியோரைக் கனம் பண்ணுதல், பெற்றோர் – ஆசிரியர்களின் சொற்படி கேட்டல்.

20 பிள்ளையாரை எப்படிக் கும்பிட வேண்டும்?
கைவிரல்களை மடக்கி நெற்றியிலே மூன்றுமுறை குட்டித் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடவேண்டும்.

21 சிவபருமானின் இடப்பக்கத்தில் இருக்கும் தெய்வத்தின் பெயரைக் கூறுக.
உமாதேவியார்

22 பிள்ளையாருக்கு வேறு இரண்டு பெயர்களைக் கூறவும்
கணபதி, விநாயகர், ஐங்கரன் ஆனைமுகன் ஏகதந்தன் கரிமுகன் ஆகிசன் மதகரி ஆகுவாகனன்

23 கயமுகாசுரனை வதம் செய்த கடவுளின் பெயரைக கூறவும்.
விநாயகப் பெருமான்

24 படைத்தல் தொழிலைச் செய்யும் கடவுளின் பெயரைக் கூறவும்.
பிரம்மா

25 பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் 2 கூறுக.
நான்முகன், பங்கயன், மலரோன்

26 திருமாலுக்கு வேறு பெயர் 4 கூறுக.
கோவிந்தன், வெங்கடேசுவரர் (வெங்கடேஸ்வரர்), முகுந்தன், முரளீதரன், மதுசூதனன், கடல்வண்ணன், மாதவன், உலகளந்தோன், நாராயணன், கேசவன், சிறீரங்கநாதன், உலகமுண்டோன்

27 முருகப் பெருமானின் கொடியில் உள்ள பறவை எது?
சேவல்

28 முருகப் பெருமானுக்கு உகந்த விரத நாள்கள் எவை?
கந்தசட்டி (கந்தசஷ்டி), திருக்கார்ததிகை விரத நாள்கள் ஆகும்.

29 முருகக் கடவுளுக்கு வேறு பெயர்கள் 5 கூறுக.
ஆறுமுகன் சேந்தன் சரவணபவன் கார்திகேயன் சுப்பிரமணியன் மயில்வாகனன் கந்தன் செவ்வேள் வடிவேலன் கடம்பன் அயிலவன் மதங்கன் கலையறிபுலவன் வேலாயுதன்

30 அம்மை அப்பனை அதாவது சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து மாம்பழத்தைப் பெற்றுக் கொண்ட கடவுள் யார்?
பிள்ளையார்

31 திருஞானசம்பந்தமூர்ததி நாயனாருக்கு ஞானப்பால் ஊட்டிய தெய்வத்தின் பெயரைக் கூறுக.
உ மை அம்மை

32 திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பிறந்த ஊர் எது?
தமிழ் நாட்டில் உள்ள சீர்காழி

33 தேவாரம் பாடிய மூன்று நாயனார்களின் பெயர்களையும் கூறுக.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
திருநாவுக்கரசு நாயனார்
சுந்தரமூர்த்தி நாயனார்

34 திருநீறு எதில் இருந்து செய்யப்படுகிறது?
பசுவின் சாணததிலிருந்து செய்யப்படுகிறது.

35 நவராத்திரி என்பது எதைக் குறிக்கின்றது?
ஒன்பது இரவுகளைக் குறிக்கின்றது

36 நவராத்திரி காலத்தில் கடைசி மூன்று நாள்களில் எந்த சத்திக்கு விசேட பூசை நடைபெறும்.
சரசுவதி தேவிக்கு விசேட பூசை நடைபெறும்.

37 கோயிலில் நடைபெறும் இரு விழாக்களின் பெயர்களைக் கூறுக.
தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா .....

38 சகலகலாவல்லி மாலையைப் பாடியவர் யார்?
குமரகுருபர சுவாமிகள்

39 திருமுறைகளைத் தொகுத்துத் தந்தவர் யார்?
நம்பியாண்டார் நம்பி

40 திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்குப் பதிகம் பாடியருளிய நாயனார் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்

41 சிவபெருமானை நினைந்து விசேடமாகச் சைவர்களால் கொண்டாடப்படும் இரண்டு தினங்கள் கூறுக.
சிவராத்திரி, ஆருத்திரா தரிசனம்.

42 சிவபுராணத்தின் முதல் வரியைக் கூறுக.
நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க

43 சிவபுராணத்தை அருளிய நாயனார் யார்? அது எத்தனையாம் திருமுறை?
சிவபுராணத்தை அருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இது 8ஆம் திருமுறை.

44 முருகக் கடவுளுக்குரிய விசேட தினம் 2 கூறுக.
திருக்கார்த்திகை, தைப்பூசம், வைகாரி விசாகம்

45 முருகக் கடவுளின் கதையைக் கூறும் புராணம் எது?
கந்தபுராணம்

46 கந்தபுராணத்தை அருளியவர் யார்?
கச்சியப்ப முனிவர்

47 மாசி மகத்தின் சிறப்பு யாது?
துர்க்கை அம்மனுக்கு விசேட தீர்த்தம் - பூசை செய்யப்படும் தினம்

48 உத்தராயணம் என்றால் என்ன பொருள்?
சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் காலம் உத்தராயணம் என்று கூறப்படும்.

49 ஓதுவார் என்று சொல்லப்படுவர்கள் யார்?
தேவாரங்களைப் பண் இசையுடன் கோயில்களில் இசைப்பவர்.

50 விரதத்தில் சிறந்த விரதம் எது?
புற உயிர்களைக் கொல்லாமையே சிறந்த விரதம் ஆகும்